Registered as a NewsPaper

வ'லை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி -04 | 16-02-2004 | திங்கட்கிழமை | ஓசை-363

உங்களிடம் தேவை இருக்கிறது
எங்களிடம் கைதேர்ந்த நகைத்
தொழிலாளர்கள் இருக்கின்றார்கள்.



கணேசா நகையகம்

194,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-9206)

123,பஜார் வீதி,
வவுனியா.

# தலைவரைச் சந்தித்துப் பேசியபின்பே தேர்தல் பற்றிக் கருத்துக்கூற முடியும்

## ஐரோப்பிய பயணத்திலிருந்து திரும்பிய சு.ப. தமிழ்ச் செல்வன் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

**தேசியத் தலைவர் அவர்களுடன் பேசி முடிவுகள் எட்டப்பட்ட பின்பே தேர்தல் சம்பந்தமான கருத்துக்களை வெளிப்படுத்தலாம் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார். ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று வன்னி திரும்பிய அவர் செய்தியா ளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

● தங்களின் ஐரோப்பிய நாடுகளுக்கான பயணம் குறித்து கருத்து தெரிவிப்பீர்களா?

சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஐரோப்பிய நாடுகளில் எங்களுடைய அவசர மனிதாபிமானத் தேவைகள், உதவிகள் சம்பந்தமாக கோரியிருக்கின்றோம். அவர்கள் உடனடியாக முடிவெடுக்காவிட்டாலும் இங்குள்ள யதார்த்தமான சூழ்நிலைகளை விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அது சம்பந்தமாக கூடிய கரிசனை கொண்டிருக்கின்றனர். சமாதான முன்னெடுப்புக்களைத் தக்கவைக்க வேண்டுமெனில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் அவசரமான மனிதாபிமான தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதில் அவர்கள் மிகவும் உறுதியுடன், இருக்கின்றார்கள். அத்துடன் அவர்கள் எப்படியான வழிமுறைமூலம் செய்வதென்பது சம்பந்தமாக எங்களிடம் கருத்துக்களைக் கேட்டறிந்தார்கள். விரைவில் இது குறித்து சாதகமான

(8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாநாட்டு அரசியலில் இருந்து விலகுவதாக மகேஸ்வரன் அறிவிப்பு

முன்னாள் இந்து கலாச்சார அமைச்சர் தி. மகேஸ்வரன் குடாநாட்டு அரசியலில் இருந்து முற்று முழுதாக விலகுவதாக அறிவித்துள்ளார்.

இவர் லண்டன் பி.பி.ஸிக்கு நேற்று அளித்த பேட்டியின் போதே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

அவர் தனது விலகல் தொடர்பாக பி.பி.ஸி.க்குத் தெரிவிக்கையில்,

தமிழர்கள் இன்று ஓரணியில் திரளவேண்டும் என்று பல்வேறு கோணங்களில் இருந்து குரல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதே வேளை, பல புனிதமான கொள்கைகள் நிறைவேற்றப்படுகின்றது என்ற உயர்ந்த நோக்கத்தைக் கருத்திற்கொண்டு விட்டுக் கொடுப்பென்ற நோக்கத்தில்தான், குடாநாட்டு அரசியலில் இருந்து தான் விலகுவதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய

(8ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றம் குறிப்பிட்ட 4அம்சங்களை சம்பந்தர் மீறி நடக்கின்றார்

### ஆனந்த சங்கரி சம்பந்தருக்கு கடிதம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் சம்பந்தனுக்கு நீதிமன்றத்தின் நான்கு விடயங்களை மீறி நடப்பதாக கூறி கடிதம் ஒன்றை ஆனந்தசங்கரி அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் வேறு எந்தவொரு அரசியல் கட்சியுடனும் தனிப்பட்ட முறையிலே தான்தோன்றித்தனமாகப்பேசமுடியாது.

கூட்டத்தைக் கூட்டாமல் முடிவெதனையும் எடுக்கமுடியாது போன்ற நான்கு அம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

சம்பந்தன் அவர்கள் இவை எல்லாவற்றையும் மீறி தன்னிச்சையில் பேசி நியமனம் வழங்கும் நடவடிக்கையிலும் ஈடுபடுகின்றார். அதனையும் சுட்டிக்காட்டி எதையும் முறைப்படி செய்யுங்கள் என்று தான் கேட்டிருப்பதாக ஆனந்த சங்கரி கூறினார்.

அதேவேளை, வரும் 18ஆம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என கூட்டணி புதனன்று முடிவுசெய்யும்

ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் எந்தக் கட்சியின் கீழ் போட்டியிடுவது என்பது குறித்து எதிர்வரும் புதன் கிழமை தீர்மானிக்கப்படும் என தமிழ்த்தேசியக் கட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சந்திப்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை என ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இதனால் மீண்டும் எதிர்வரும் 18ஆம் திகதி கூடி இறுதித் தீர்மானம் எடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தின் கீழ் போட்டியிட இப்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏகோபித்த விருப்பமாக இருப்பதாக அவர் கூறினார்.

எவ்வாறாயினும் தற்போது நிலவும் சட்டச்சிக்கலை எதிர்வரும் 17ஆம் திகதிக்குள் தீர்த்துக் கொள்ள முடியும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளர் ஆர்.சம்பந்தன் நேற்றைய கூட்டத்தில் தெரிவித்ததையடுத்து இறுதித் தீர்மானத்தை எதிர்வரும் புதன்கிழமை வரை ஒத்தி வைத்துள்ளதாக செல்வம் அடைக்கல நாதன்

(8ஆம் பக்கம் பார்க்க)

## புலோலி சாரையடிப்பகுதியில் புதிய படைமுகாம் அமைப்பு

வடமராட்சியின் புலோலி சாரையடிப் பகுதியில் புதிதாக படைமுகாம் ஒன்றை அமைக்கும்நடவடிக்கையில் இராணுவம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. யாழ்.பருத்தித்துறை வீதியோரமாக சாரையடிப் பகுதியில அமைந்துள்ள பனங்காணிப் பகுதியிலேயே இப்படைத்தளம் நிறுவப்பட்டு வருகிறது.

ஏற்கனவே இப்பகுதியில் அமைந்திருந்த இராணுவ காவலரணிற்கு மேலதிகமாக அப்பகுதியில் இராணுவவாகனங்கள் மூலமாக எடுத்து வரப்பட்ட பனங் குற்றிகள் மற்றும் மண்மூடைகளைக் கொண்டே இம்முகாம் அமைக்கப்பட்டு வருகிறது. (27)

## -ஆனந்த சங்கரி தாக்கல் செய்த வழக்கில்-

## கொழும்பு நீதிமன்ற தீர்ப்புக்கெதிராக இரா. சம்பந்தன் மேன் முறையீடு

(கொழும்பு)

ஆனந்தசங்கரி தாக்கல் செய்த வழக்கில் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக கட்சியின் செயலாளர் நாயகம் ஆர். சம்பந்தனும் தானும் மேன்முறையீடு செய்ய இருப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் ஜோசப் பரராசசிங்கம் தெரிவித் தார்.

கட்சியின் தலைவர் வி.ஆனந்த சங்கரி செயலாளர் ஆர்.சம்பந்தனுக்கு எழுதிய கடிதத்தில் வேறுகட்சிகளுடன் இணைந்துகூட்டங்களை நடத்துவதற்கு தங்களுக்குஅதிகாரம் இல்லையென எழுதியிருப்பது பற்றி ஜோசப்பரராச சிங்கத்திடம் கேட்டபோது, தாங்கள் எந்தக் கட்சிகளுடனும் பேசலாம் அது தமக்கிருக்கும் தனிமனித்தசனநாயக உரிமை என தெரிவித்தார். தாங்கள் தமிழரசு கட்சி சின்னத்தில் போட்டியிடுவதை ஆனந்த சங்கரி தடுக்கமுடியாது என்றும் அவர்கூறினார். தமிழர் விடுதலைக் கூட்டணி அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தமிழீழ விடுதலைக்கழகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி ஆகிய நான்கு கட்சிகளின் கூட்டமைப்பான தமிழர் தேசிய கூட்டமைப்பு வடக்கு கிழக்கில் போட்டியிடுவதை யாரும் தடுக்க முடியாது.

பெரும்பாலும் தமிழரசு கட்சியின்

(8ஆம் பக்கம் பார்க்க)

## - அம்பாறை மாவட்ட -

## உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைப்பு குறித்து ஆராய்வு

(கொழும்பு)

அம்பாறை மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைப்பது குறித்து தேர்தல் ஆணையகம் கவனம் செலுத்தி வருகிறது. அம்பாறை மாவட்டத்தின் 8 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெறவிருந்தது. எனினும் பொதுத் தேர்தலின் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படவிருப்பதால் மாவட்டச் செயலகத்தில் ஏற்படும் சிக்கல் நிலை குறித்து அம்பாறை மாவட்டச் செயலர் தேர்தல் ஆணையாளரிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க ஜூலையில் சர்வசன வாக்கெடுப்பு

### -முன்னாள் பா.உ. மங்கள சமரவீர தெரிவிப்பு

நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமற் செய்யஜூலையில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும். பின்னர் பிரதமராக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடாளுமன்றம் செல்வார் என முன்னாள் பொ.ஐ.மு. பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றதும் அனைத்து மாகாணசபைகளும் உடனடியாகக் கலைக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

மாத்தறையில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் ஒரே தினத்தில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்பதன் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளதாக அவர் கூறினார். மாகாண சபைத் தேர்தல்களின் பின்னர் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றும் நடத்தப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்த உடன்படிக்கை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

### ஜே.வி.பி. பிரச்சாரச் செயலாளர் தெரிவிப்பு

சிறிலங்காவின் விடுதலைப் புலிகளுடனான தற்போதைய போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை சிறிலங்காவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதாக ஜே.வி.பி. கூறியுள்ளது.

ஜே.வி.பி.யின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச இடதுசாரி வாரப்பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தம்மால் நியாயமான நிபந்தனைகள் என்று கூறப்படும் நிபந்தனைகளின் அடிப்படையில் விடுதலைப்புலிகளுடன் புதிய ஒரு போர்நிறுத்த உடன்படிக்கை குறித்து விவாதிக்கத் தாம் தயாராக இருப்பதாகவும் விமல் வீரவன்ச அப்பத்திரிகைக்கு மேலும் தெரிவித்துள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

மோர் றேட் வெள்ளவத்தையை கொழும்பைச் சேர்ந்த கந்தையா ராஜேந்திரம் என்பவரது பயணப்பை தவறிவிட்டது. இதில் முக்கியமான ஆவணங்கள் உள்ளன. கண்டெடுப்பவர்கள் தயவு செய்து கீழ்க் காணும்முகவரிக்கு அறியத்தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். அ.யசோதரன்,252/3 முரசுமோட்டை,பரந்தன். (4239)

### வைத்தியசாலை அமைப்பு

புலோப்பளை சித்த ஆயுள்வேத வைத்தியசாலையும் முகமாலை உப அலுவலகத்தின் கீழ் உள்ள இத்தாவில் புதிய சித்த ஆயுள்வேத வைத்தியசாலையுமாக இரு வைத்தியசாலைக் கட்டடங்கள் 20லட்சம் ரூபா செலவில் அமைக்கப் படுவதற்கான சகல நடவடிக்கையினையும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினர் மேற்கொண்டு வருகின்றனர். (11)

# எந்தக்கட்சி பதவிக்கு வந்தாலும் வட-கிழக்கு அபிவிருத்தி நிதியில் மாற்றமில்லை

## ஆசிய அபிவிருத்திவங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

எந்தக்கட்சி பதவிக்கு வந்தாலும் வடக்குக் கிழக்கு அபிவிருத்திக்கு வழங்கப்படும் உதவிகளில் எந்த விதமாற்றமும் இருக்காது என ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

அது மேலும் தெரிவிக்கையில், தேர்தல் ஒன்று இடம் பெறுவதாலோ அன்றி அந்தத் தேர்தலுக்குப்பின் ஆட்சி மாறுவதாலோ அபிவிருத்தி நடவடிக்கைகளில் எந்தப் பாதிப்பும் ஏற்படப்போவதில்லை எனவும் அது தெரிவித்துள்ளது.

வவுனியா அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் வீதி அபிவிருத்தி பொறியியலாளர் மோகன்ராஜ் இதனைத் தெரிவித்துள்ளார்.

நானூற்றிஐம்பது கோடிரூபா உத வித்திட்டத்தின்கீழ் வடக்குக் கிழக்கில் இடம்பெறவுள்ளவீதி அபிவிருத்திப் பணிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் இந்தத் திட்டத்தின் கீழ் இப்பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்நூறு கிலோமீற்றர் நீளமான பாதைகள் புனரமைக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஏ-9 வீதியின் புனரமைப்புப் பணிகள் 86 சதவீதம் பூர்த்தியடைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கிளி.வெண்மைச் சங்கத்தினருக்கு சமகால அரசியல் கருத்தரங்கு

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி பிரதேச வெண்மைச் சங்கத்தினருக்கான சமகால அரசியல் கருத்தரங்கு நேற்றுக் காலை 10.00மணிக்கு கிளிநொச்சிப் பிரதேச அரசியல்துறை செயலகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் த.நிருபன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் சமகால அரசியல் நிலை தொடர்பாக த.நிரூபனும் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக கிளிநகர் வலயப் பொறுப்பாளர்கள் திருமறவன், திருமாறன் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

கிளி. பிரதேச வெண்மைச் சங்க உறுப்பினர்கள் பெருமளவில் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

# ஐ.தே.க. சார்பில் ஹக்கீம் கண்டிமாவட்டத்தில் போட்டி

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஐக்கியதேசிய முன்னணி சார்பில் கண்டியில் போட்டியிடவுள்ளதாக நேற்று தெரிவித்தார். ஒரு கட்சி தலைவருக்கு நாட்டின் எல்லாப் பாகங்களிலும் ஆதரவு உண்டென கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையில் அவர் கூறினார்.

# திருக்கேதீச்சர ஆலய மகாசிவராத்திரி விழா

திருக்கேதீச்சர ஆலய மகா சிவராத்திரி விழா எதிர்வரும் 18-ஆம்திகதி காலை 5.00 மணிக்கு ஆரம்பமாகிறது தொடர்ந்து பூசைகள் நடைபெற்று மறுதினம் காலை 6.30 மணிக்கு பாலாவியில் தீர்த்தமாடல் நடைபெறும்.

### -திருமலை மாவட்டத்தில்-

# பெரும்போக நெல்லை சந்தைப்படுத்துவதில் சிக்கல்

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் பெரும்போக நெல் அறுவடை தற்போது நடைபெற்றுவருகின்றது.

இதேவேளை அறுவடை செய்யப்பட்டநெல்லினை சந்தைப்படுத்துவதில் விவசாயிகள் சிக்கல்களை எதிர்நோக்குவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வெளிமாவட்டங்க ளில் இருந்து வந்து நெல்லைக் கொள்வனவு செய்வோர் குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்வ தாகவும், தெரிவிக்கப்படுகிறது.

# சுயேட்சை வேட்பாளர்கள் இன்றுமுதல் கட்டுப்பணம் செலுத்துவர்

பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதை அடுத்து தேர்தல் நடவடிக்கைக்கு அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் சொத்துக்களைப் பயன்படுத்துவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்தமுடிவு தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் வரை அமுலில் இருக்கும். இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிட உத்தேசித்துள்ள சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தை இன்றுமுதல் செலுத்த முடியும் என்று தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி பிற்பகல் 3.00மணி வரை கட்டுப்பணம் செலுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் சுயேட்சைக் குழுக்களின் சார்பில் வவுனியாமாவட்டசெயலகத்தில் கட்டுப்பணத்தை செலுத்துவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இடம்பெயர்ந்த மக்களுக்கு வசதியான வாக்களிப்பு நிலையங்களைப் பயன்படுத்துவதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க விடுக்கப்பட்டிருந்த காலஎல்லையை நீடிக்க தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் 21ஆம் திகதிவரை இந்த காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

## இலட்சார்ச்சனை

தெல்லிப்பளை துர்க்காபுரம் சிறி துர்க்காதேவி தேவஸ்தான மாசி மக இலட்சார்ச்சனை வரும் 25ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி மார்ச் 5ஆம் திகதி பூர்த்தியடையும். மாசிமகப் பெருவிழா மார்ச் 6ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

# திஸாநாயக்கவின் உரைகுறித்து உயர்நீதிமன்றம் ஆராய்வு

(கொழும்பு)

உயர் நீதிமன்றக்கின் எங்கவொரு கேவலமான தீர்ப்பையும் ஐக்கிய தேசியக்கட்சி ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என எஸ்.பி.திஸாநாயக்க கூறியதாக கூறப்படும் ஒளிநாடாவை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளுமாறு பிரதம நீதியரசர் சரத் என்சில்வா உச்ச நீதிமன்ற செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி ஒளிப்பதிவு நாடாவில் எஸ்.பி.திஸாநாயக்க ஆற்றிய உரை உச்ச நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் அமைந்துள்ளதா என்பதைத் தெரிந்து கொள்வதற்கா கவே இந்த ஒளிப்பதிவு நாடா கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த ஒளிப்பதிவு நாடாவை உச்சநீதிமன்றத்தின் ஒன்பது நீதியரசர்கள் பார்வையிட்டு இது சம்பந்தமாக முடிவுசெய்ய உள்ளனர் எனவும் இந்த நீதியரசர்கள் எடுக்கும் தீர்மானத்தைப் பொறுத்து அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க மீது எடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கப்பட உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த நவம்பர் மாதம் மூன்றாம் திகதி ஹபராதுவ பிரதேசத்தில் இடம்பெற்ற ஏர்பூட்டும் விழாவின் போது அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க உச்ச நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் உரை நிகழ்த்தியதாக குற்றம்சாட்டி மூவர் நீதிமன்றத்தில் புகார் செய்ததையடுத்தே அமைச்சர் மீது இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

# ஏலவிற்பனை

| | | |
|---|---|---|
| எல்ப்வான் | - | த12-9835 |
| இயந்திர இலக்கம் | - | 3எல்-2846360 |
| அடிச்சட்ட இலக்கம்- | | எல்எச்-123-0008732 |

கிளிநொச்சி கல்விக்கழகத்திற்குரிய ஓடக்கூடிய நிலையிலுள்ள மேற்படி எல்ப் வான் ஏலவிற்பனைக்கு விடப்படுகிறது. இவ்வாகனம் கிளிநொச்சி கல்வி அலுவலகத்தில் வைத்து 21–02–2004 காலை 09.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும். மேற்படி வாகனத்தைப் பார்வையிட விரும்புவோர் 18–02–2004 – 20–02–2004 திகதிகளில் அலுவலகநாட்களில் காலை 8.30 தொடக்கம் மாலை 4.00 மணிவரை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிடலாம்.

ப. அரியரத்தினம்,
வலயக்கல்விப் பணிப்பாளர் ,
கிளிநொச்சி.

(சி-8790)

# சாவு அறிவித்தல்

## பொன்னையா மாணிக்கவாசகர்

### பூநகரி மட்டுவில் நாடு

பூநகரி மட்டுவில் நாட்டைப் பிறப்பிடமாகவும், கனடா ரொறன்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தங்கரத்தினம் தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வன் திரு. மாணிக்கவாசகர் கனடாவில் 12.02.2004இல் இறைவனடி எய்தினார். இவர் வனிதாமணியின் அன்புக் கணவரும், டாக்டர் வாசுகி, வைதேகி, வசீகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன். தில்லைநாதன் உதவிக் கல்விப் பணிப்பாளர் கிளிநொச்சி, சுந்தரமூர்த்தி லண்டன், முத்துக்குமாரசாமி பிரதேசசெயலகம் பருத்தித்துறை ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவனேசராணி,விமலாதேவி சர்வதயா ஆகியோரின் மைத்துனரும் ஆனந்தகுமார்(அமெரிக்கா) ஆனந்த நிரூஜா, ஆனந்த வண்ணன்(பூநகரி ம.வி) சாந்தினி (போராளி) பிரதீபன் ஆகியோரின் பெரிய தந்தையுமாவார். அன்னாரது கிரியைகள் 15.02.2004 ரொறன்டோவில் நடைபெற்றது. இச் செய்தியை உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நேரடியாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தகவல்:-
பொன். தில்லைநாதன்
(சகோதரர்)
பூநகரி.

(4241)

# துர்க்காபுரம் மகளிர்இல்ல 22ஆவது ஆண்டு நிறைவு விழா

தெல்லிப்பளை துர்க்கா புரம் மகளிர் இல்ல 22ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஸ்ரீதுர்க்காதேவி அன்ன பூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்று காலை 9.30 மணிக்கு துர்க்காபுரம் மகளிர் இல்லத் தலைவர் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைமையில் இந் நிகழ்வு ஆரம்பமாகும்.

# கடுகஸ்தோட்டையில் ம.ஐ.மு.அமைப்பாளர் மீது தாக்கு

(கொழும்பு)

கடுகஸ்தோட்ட பொலிஸ் பிரதேசத்திற்குள் நேற்று தேர்தல் வன்முறைச்சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இதன்போது மக்கள் விடுதலை முன்னணியின் கரிஸ்பத்துவ அமைப்பாளர் சந்தனபிரேமதிலக காயமடைந்துள்ளார்.

இதன்போது அவரது வீடும் தாக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# சாவு அறிவித்தல்

## எசேக்கியேல்-திரேசம்மா

வலித்தூண்டல் கீரிமலையைச் சொந்த முகவரியாகவும் 2ஆம் வட்டாரம் கோம்பாவில் புதுக் குடியிருப்பை தற்காலிக முகவரியாகவும் கொண்ட எசேக்கியேல் திரேசம்மா(வயது74) 14.02.2004அன்று சாவடைந்தார். இவர் காலஞ்சென்ற எசேக்கியேலின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற றோஸ்மேரியின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற மார்க் யோசேப்பின் அன்பு மாமியாரும், வதனி, றஜனி, றோகினி, பாபு, சுகி, ஜெமி, அன்ரன் யோகராஜா, அன்ரனி டன்ஸ்ரன், எட்மன்போல் ஆகியோரின் அன்புப் பேத்தியும், ஜெமில்டன், தமயா, அமலன், விமலன் ஆகியோரின் அன்புப்பூட்டி யும்ஆவார்.

அன்னாரின் ப,தவுடல் இவரது தற்காலிக இல்லத்திலிருந்து 16.02.2004 அன்றுகாலை 9.00மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரணைப்பாலை புனித பற்றிமா மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
கை. அன்ரனிடன்ஸ்ரன்,
அருளகம்(பேரன்),
2ஆம் வட்டாரம்,
கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.

(சி-7159)

# இந்தியாவிலுள்ள தீவிரவாத முகாம்களை அகற்றுமாறு பங்களாதேஷ் வேண்டுகை!

## கண்டறிய படையினருக்கு உத்தரவு

இந்தியாவிலிருந்து தனது நாட்டிற்குள் தீவிரவாத செயற்பாடுகள் முடுக்கி விடப்படுவதாக பங்களாதேஷ் குற்றம் சாட்டியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டையடுத்து இதுபற்றி நடவடிக்கையெடுப்பதாக இந்திய அரசு உறுதியளித்துள்ளது.

பங்களாதேஷில் தீவிரவாத செயற்பாடுகளை முன்னெடுக்க இந்தியாவினுள் பல தீவிரவாத முகாம்கள் இருப்பதாக பங்களாதேஷ் குற்றம் சாட்டியுள்ளது.

பங்களாதேஷ் அரசின் தகவலின்படி இந்திய எல்லைக்குள் 39 தீவிரவாத முகாம்கள் செயற்பட்டு வருகின்றன. இம் முகாம்களிலிருந்து எல்லையூடாக தீவிரவாதிகள் நாட்டிற்குள் பிரவேசிக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், டாக்காவின் இந்தக் கூற்றை ஆராய்வதாக இந்திய அரசு கூறியுள்ளதுடன் அதற்கான நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளது.

குறித்த பகுதிகளுக்குச் சென்று நேரடியாக இத்தகவலை உறுதி செய்யும் பணி உளவு அமைப்புக்களுக்கும் மற்றும் இந்திய இராணுவத்தினருக்கும் வழங்கப்பட்டுள்ளதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க இந்தியா, பங்களாதேஷினுள் பலதீவிரவாத முகாம்கள் செயற்பட்டு வருவதாகவும் அதனைக் கட்டுப்படுத்த டாக்கா உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் அண்மையில் கோரியிருந்தது. அத்தோடு பூட்டானிலும் வட-கிழக்கு மாநில தீவிரவாதிகள் முகாம்கள் இருப்பதாகக் கூறி பூட்டான் அரச படையினருடன் இணைந்து இந்தியப் படையினர் நடவடிக்கை மேற்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



ஈராக்கில் சுயாட்சி வழங்குமுன்பு அங்கு தேர்தல் நடத்துவது பற்றி பேச்சு நடத்தும் ஐ.நா.அதிகாரிகளும் ஈராக்கிய அதிகாரிகளும்.

### மொஸ்கோவில் விபத்து 21பேர் பலி; பலர் காயம்

(மொஸ்கோ)

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் நீச்சல் தடாகம் ஒன்றின் கூரைக்கண்ணாடி உடைந்து வீழ்ந்ததில் 21 பேர் உயிரிழந்துள்ளதுடன் 110 பேர் காயமடைந்துள்ளனர்.

அதிகளவான பனிக்கட்டி படிந்தமையால் கூரை பாரம் தாங்க இயலாது உடைந்து வீழ்ந்துள்ளதாக கூறப்படுகிறது.

- மேற்குக்கரை பாதுகாப்புச்சுவர் குறித்து -

# சர்வதேச நீதிமன்ற விசாரணைகளை புறக்கணிக்க இஸ்ரேலிய அரசு முடிவு!

**பலஸ்தீனத்தின் மேற்குக்கரைப் பிரதேசத்தில் பாதுகாப்புச் சுவர் நிர்மாணிக்கப்படுவதை எதிர்த்து சர்வதேச நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கை புறக்கணிக்க இஸ்ரேல் முடிவு செய்துள்ளது.**




சர்சைக்குரிய சுவரை மேற்குக்கரையில் நிர்மாணிப்பது சட்ட வலுவானதா என்பதைதீர்மானிக்க ஹேகில் உள்ள சர்வதேச நீதிமன்று இம்மாதம் 23ஆம் திகதி கூடவுள்ளது.

இந்த விசாரணையை எதிர்த்து வரும் இஸ்ரேல், தனது சட்ட வல்லுநர்களிடம் ஆலோசனை பெற்றுக் கொண்டதையடுத்து மேற்படி வழக்கு விசாரணைகளில் கலந்து கொள்ளாமலிருக்க முடிவெடுத்துள்ளது. இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோனின் அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலில் நடத்தப்படும் தற்கொலைத் தாக்குதலை முறியடிக்கவே பாதுகாப்புச் சுவர்கட்டப்படுகிறது. இவ்வாறு நடப்பதற்கு இஸ்ரேலுக்கு உரிமையுண்டு. இதனைத் தடுப்பதற்கு சர்வதேச நீதிமன்றுக்கு அதிகாரம் கிடையாதென இஸ்ரேல் அமைச்சரவை தெரிவிக்கிறது.

இந்த சர்ச்சைக்குரிய பாதுகாப்புச் சுவர் குறித்து நீதி விசாரணை மேற்கொள்ள சர்வதேச நீதிமன்றுக்கு அதிகாரம் உள்ளதா என அமெரிக்கா, ஜேர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகள் கேள்வி எழுப்பியுள்ள நிலையில் இஸ்ரேலின் முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாதுகாப்புச் சுவர் குறித்து விசாரிக்கப்பட வேண்டுமென ஐ.நா. பொதுச்சபை கடந்த டிசம்பரில் முடிவு செய்த பின்னரே ஹேக் நீதிமன்றம் இது குறித்து தீர்ப்பளிக்க வேண்டுமென கோரப்பட்டது. இதன் தீர்ப்பு இஸ்ரேலை கட்டுப்படுத்தா விட்டாலும் தனக்கு பாதகமான தீர்ப்பால் சர்வதேச அபிப்பிராயம் தனக்கு எதிராக இருக்கும் என்பதையிட்டு இஸ்ரேல் கவலை தெரிவித்துள்ளது.

# போதைப்பொருள் வர்த்தகம் தடையின்றி தொடர்கிறது!

ஆப்கானிஸ்தானில் போதைப் பொருள் வர்த்தகம் மூலம் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புக்கள் பலகோடி டொலர்களை வருமானமாகத் திரட்டி இருப்பதாக உலக போதைப் பொருள் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

தலிபான் ஆட்சி அகற்றப்பட்ட பின்னரும் இஸ்லாமிய அமைப்புக்கள் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருவதாகவும் இந்த அமைப்பு மேலும் கூறியுள்ளது.

# ஆன்சாங் சூகி அம்மையாரின் ஆலோசகருக்கு வீட்டுக்காவல்

மியன்மாரில் எதிர்க்கட்சி தலைவியும் சனநாயக நடவடிக்கையாளருமான ஆன்சாங் சூகியின் பிரதம ஆலோசகர் கின்கு இராணுவ கட்சியாளர்களினால் வீட்டுக் காவலில் வைக்கப்பட ்ள்ளார்.

மியன்மார் இராணுவ அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில்;

அவரது சொந்த பாதுகாப்புக் கருதியே வீட்டுக்காவலில் அவர் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

### 20ஆக உயர்வு

தாய்லாந்தில் பறவைக் காய்ச்சல் நோயால் நேற்று 13வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

இதனுடன் ஆசிய நாடுகளில் பறவைக்காய்ச்சலால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது.

# கிளர்ச்சியாளரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மனிதாபிமான செயற்பாடுகள் பாதிப்பு


## - கெயிட்டி நிலை குறித்து ஐ.சி.ஆர்.சி. கவலை

கெயிட்டியில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப் பாட்டுப் பிரதேசத்தில் உணவு மற்றும் மருந்துப் பொருட்களுக்கான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்நிலை குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் கிளர்ச்சிவாதிகள் மற்றும் மனிதாபிமான அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

தற்போது கையிலுள்ள உணவுப் பொருட்கள் இன்னும் சில நாட்களுக்குத் தான் போதுமானது.

மருத்துவமனைகளில் மருந்துப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் நோயாளர்கள் பலர் வைத்தியர்களின் பரிசோதனைக்காக காத்திருப்பதாகக் கூறப்படுகிறது. இந்நிலை குறித்து மனிதாபிமான அமைப்புக்கள் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஈராக்கிற்கு வருகைதந்துள்ள ஜப்பானிய படைகளின் சமரா நகர முகாமில் காவல் கடமையில் இருக்கும் ஜப்பானிய ராணுவ வீரர்.

# மக்களின் பாதுகாப்பை கருத்திற்கொள்ளாது பொருளாதாரத்துக்கே ஆசியநாடுகள் முக்கியத்துவம்!

## -உலக சுகாதார ஸ்தாபனம் கண்டனம்

பறவைக் காய்ச்சல் விவகாரத்தில் ஆசியநாடுகள் பொது மக்களின் சுகாதாரத்தையும் பாதுகாப்பையும் விட தத்தம் பொருளியலுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்த வருவதாக உலக சுகாதார நிறுவனம் குறைகூறியிருக்கிறது.

பறவைக்காய்ச்சலைகட்டுப்படுத்தும் நோக்கில் கோழிகளை சாகடிக்கும்படி உலக சுகாதார நிறுவனம் விடுத்த நிபுணத்துவஆலோசனைக்கு இந்தோனேசியா கட்டுபட்டு நடக்கவில்லை என்று தெரியவந்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை பாலித்தீவில் 228000க்கு மேலான கோழிகள் சாகடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. சுமார் 10 மில்லியன் கோழி கள் சாகடிக்கப்பட்டால் மட்டுமே பறவைக்காய்ச்சல் நோயினைக் கட்டுப்படுத்த முடியும் என இந்தோனேசிய சமூகநல அமைச்சர் கூறியுள்ளார்.

# யார்ஆட்சியமைத்தாலும் ம.தி.மு.க. அதில் இடம்பெறாது

## வைகோ அறிவிப்பு

(சென்னை)

மக்களவைத் தேர்தலுக்குப் பின்னர் மத்தியில் அமையும் எந்தவோர் அரசிலும் ம.தி.மு.க. இடம்பெறாதென அதன் பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் கட்சியின் பொதுக்குழு கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் மக்களவைத் தேர்தலுக்கான ம.தி.மு.க. வின் வேட்பாளர் பட்டியல் எதிர்வரும் 19ம் திகதி சென்னை அண்ணா நகர்பொதுக் கூட்டத்தில் அறிவிக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை கட்சியின் தேர்தல் அறிக்கையைத் தயாரித்து ஐந்து பேர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

# அரசியல் பொறி

**உப்புல் ஜோசப் பர்னாண்டோ லங்காதீப**
**மொழியாக்கம்: வழிவேல்**

ஐ.தே.கட்சி தேர்தலுக்கு அஞ்சுகிறது என சிறில சு.கட்சியும் ஜே.வி.பி.யும் எண்ணுகின்றன. அது உண்மைபோலவே தோன்றுகின்றது. எவ்வளவு துாரம் அஞ்சுகிறது என்றால் அக்கட்சி உறுப்பினர்களும் அமைச்சர்களும் ரணிலிடம் கெஞ்சி மன்றாடுவதைப் பார்க்கும் போது தெரிகிறது. சிலர் சனாதிபதி சந்திரிகா கேட்பதை கொடுக்கச் சொன்னார்கள். சிலர் சந்திரிகாவோடு ஒத்துப்போகுமாறு கூறினார்கள். வேறு சிலர் சனாதிபதி சந்திரிகாவுக்கெதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருமாறும் தேர்தல் ஒன்றுக்கு சனாதிபதியை தள்ளி விடவேண்டாம் என கோரினர். இவற்றை நோக்கும் போது ஐ.தே.கவினர் தேர்தலுக்கு அஞ்சியதும் அஞ்சுவதும் புலனாகிறது.

ஆனால் பிரதமர் ரணிலின் நிலைப்பாடு என்னவெனில் அது அவருக்கு மட்டுமே தெரியும். கட்சியிலுள்ளவர்களுக்கும் அமைச்சர்களுக்கும் தெரியாது. அவர்களின் நினைப்பு ரணில் ஏமாந்துவிட்டார் சந்திரிகாவின் கையில்பிடிபட்டுவிட்டார். அவருக்கு அரசியல் தெரியாது. அவர் முட்டாள் என்றே. அப்படி நினைக்கவிட்டு ரணிலும் குழந்தையைப் போல் இருக்கிறார். ஆயினும் அவர் குழந்தையல்ல.

இந்தத் தேர்தல் தேவைப்பட்டது ரணிலுக்கேயன்றி வேறு யாருக்குமல்ல. பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறாது எனக் கூறிக்கொண்டே சனாதிபதியை தேர்தல் ஒன்றுக்கு தள்ளிவிட்டுள்ளார்.

## ரணிலுக்கா?

அதற்குக் காரணம் அவரோடு சேர்ந்து அரசு நடத்த முடியாது என்பதை விளங்கியே. ஐ.தே.கட்சி மூலமாக அல்லாமல் பொது மக்களைக் கொண்டு சனாதிபதி சந்திரிகாவின் நாடகத்தை முடிவுக்குக் கொண்டு வருவதே அவரின் திட்டமாகும். ஆயினும் சனாதிபதித் தேர்தல் மூலம்அது சாத்தியமாகாது, காரணம் அடுத்த சனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிட முடியாது; பொதுத் தேர்தல் ஒன்றிலேயே வெற்றி கொள்ள முடியும் என்பது அவரின் எண்ணம். அவற்றை எல்லாம் நன்கு சிந்தித்தே அவரை தேர்தலுக்கு இழுத்துள்ளார். அதற்காகவே அவர் மூன்று அமைச் சுக்களைப் பொறுப்பேற்ற போது மௌனமாக இருந்தார்.

அதேபோன்றே சந்திரிகாவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரும், ரணில் விழுந்து விட்டார், அவர் பயந்துவிட்டார் அவருக்கு ஒரு மார்க்கமும் இல்லையெனக் கருதுகின்றனர். அதனாலேயே ரணிலின் அரசுடன் இணைந்து செயற்படுவது என ஐ.தே.க.வினருக்கு அச்சமாக இருக்கிறது. இதனால் அவர்கள் ரணிலையும் குறை கூறுபவர்களாக இருக்கின்றனர். தேர்தலைத் தவிர்த்திருக்கலாம் என்றும் சனாதிபதிக்கெதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருக்கலாம் என்றும் அங்கலாய்கின்றனர்.

ஆனால் ரணிலின் நோக்கமானது, ஜே.வி.பி.யினருடன் கூட்டணியமைத்தால் பொ.ஐ.முன்னணிக்குள் பிளவு ஏற்படும். தமது ஆதரவாளர்களின் வெறுப்புக்குள்ளாகிய-சந்திரிகா ஜே.வி.பி.யின் மடியில் விழுந்து விடுவார். அவர்களின் அழுத்தங்களுக்கு உள்ளாகி தனது தவறை சந்திரிகா உணரட்டும் என ரணில் நினைத்திருந்தார்.

இது இவ்வாறிருக்க சந்திரிகா ஆரம்பம் முதலே ஜே.வி.பி.யினரின் அழுத்தம் காரணமாக அரசியலமைப்பில் மாற்றத்தைக் கொண்டுவந்து ஐ.தே.க.வைப் பிளவுபடுத்த முடிவுசெய்தார். அப்போது சந்திரிகா விரும்பினார். இந்த சூழ்ச்சியை ரணில் அறிந்திருந்தார். ஐ.தே.க.வினர் அறியவில்லை. ஐ.தே.க.வினர் கூட்டணி அமையட்டும் சந்திரிகாவுடன் இணைந்து அதனை உடைத்தெறிய தருணம் வரும் என்று நினைத்தனர். ரணில் அப்போதும் மௌனமாக இருந்தார். இதனால் ஐ.தே.கட்சியினர் மேலும் அச்சமுற்றனர். இவர்கள் இவ்வாறு அச்சமுறுவதால் உடன் தேர்தல் ஒன்றை சந்திரிகா நடத்த முன்வருவார் என்று ரணில் நினைத்தார். அதேபோல தேர்தலும் நடக்கத் தயாராகி விட்டது. இது பொ.ஐ.முன்னணியினருக்கும் ஜே.வி.பி.யினருக்கும் பெரும் சந்தோசத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஜே.வி.பி. இணையவில்லை. எனினும் 2000ஆம் ஆண்டு அவர் பாராளுமன்றில் கொண்டுவந்த அரசியலமைப்பு மாற்றம் நிறைவேறவில்லை.

இரண்டாவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை அமைச்சரவையிலிருந்து நீக்கியது, அதனால் அவருக்கு பாராளுமன்றப் பெரும்பான்மை இழக்கப்பட்டது. 3வது ஐ.தே.க.வுடன் அன்று தேசியரசு ஏற்படுத்தும் நடவடிக்கையும் பொய்த்துவிட்டது.

நான்காவதாக ஜே.வி.பி.யுடன் கூட்டரசாங்கத்தை ஏற்படுத்த முயன்றமையினால் சிறிலங்கா சு.கட்சியினர் சிலர் ஐ.தே.கவில் இணைந்தனர். பின்னர் 2001ஆம் ஆண்டு அவர் தோல்விகண்டது, தற்போது ஜே.வி.பி.யின் அழுத்தம் காரணமாக முக்கிய அமைச்சுக்கள் மூன்றைக் கைப்பற்றியது. இறுதியாக ஜே.வி.பி.யுடன் இணைந்து கூட்டணி அமைத்துத் தேர்தலுக்கு முகம் கொடுக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது எவ்வளவு தூரம் சாத்தியப்படும்?


ரணில் எண்ணுவது போன்று அவருக்கு தேவையானதையே சந்திரிகா இப்போது செய்துள்ளார்.

பிரதமர் ரணில் தனது அரசியல் எதிரியை வீழ்த்த எடுக்கும் நடவடிக்கைகள் வரலாற்றில் எந்த அரசியல்வாதியும் கைக்கொள்ளாத வழிவகைகளையே-எந்த அரசியல்வாதியும் தனது எதிரியை அரசியல் வியூகங்கள் மூலமாகவே வீழ்த்தினர்.

பிரதமரின் திட்டம் வேறுவிதமானது. சிறிமா பண்டாரநாயக்கவை டட்லி வீழ்த்தியதும், சிறிமா ஜே.ஆரைவீழ்த்தியதும், சந்திரிகா ரணிலை வீழ்த்தியதும் அவ்வாறே. எனினும் அவர்கள் வீழ்ந்துவிடவில்லை. அவர்கள் எழுச்சி பெற்றே முன்னேறினர்.

ஆனால் ரணில் சந்திரிகா என்ன செய்தாலும் அதேபோக்கில் விட்டுவிட நினைக்கின்றார். சந்திரிகாவின் நடவடிக்கைகளுக்கு மக்கள் தீர்ப்பு வழங்குவர் என எண்ணுகின்றார். சந்திரிகாவின் நடவடிக்கைகளை கட்சியில் உள்ளோர் விரும்பினாலும் பொதுமக்கள் விரும்ப மாட்டார்கள். தேர்தலில் வெல்வது கட்சிக்காரர்கள் அல்ல. பொதுமக்களே என்பது ரணிலின் கருத்து. பொது மக்கள் ரணிலுக்கு அளித்த அதிகாரத்தை சந்திரிகா பறிப்பதை பொது மக்கள் விரும்ப மாட்டார்கள். சந்திரிகா தனது அதிகாரத்தால் கட்சியின் கடும் போக்காளர்களையும் ஜே.வி.பியினரையும் திருப்திப்படுத்த, நினைக்கிறார் அதற்கு ரணில் எதிர்ப்புத்தெரிவிக்காமல் விட்டது ஜே.வி.பியினரையும் கடும் போக்காளர்களையும் சந்திரிகா திருப் திப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகளை எடுக்காது விடுவாரென ரணில் நினைத் ததாலேயே இது பெரும்

## சந்திரிகாவுக்கா?



தவறு என்பது அரசியல் வாதிகளின் கருத்துக்கு காரண மாயிற்று. இவர் நடப்பவை நடக்கட்டும் என்று கண்ணை மூடிக்கொண்டும் எதிர்க் கட்சித்தலைவர் போன்றும் செயற்படுகின்றார் என கம்யூனிஸ்ட் கட்சியினரும் கூறியிருந்தனர். அவர்கள் கூறியதும் ஒரு வகையில் சரியே. ரணில் அன்று செய்த வற்றையே இன்றும் செய்கின்றார். சந்திரிகாவுடன் ஒத்துப்போய் தேசியஅரசு ஒன்று அமைத்திருந்தால் தேர்தலைத் தவிர்த்திருக்கலாம். 2005 ஆம் ஆண்டுக்குப் பின் அவரை ஓய்வுபெறச் செய்திருக்கலாம். இருக்கும் வரை சமாதானத் திட்டங்களை அபிவிருத்தியையும் நடத்த விட்டிருக்கலாம். என மக்கள் நினைத்திருப்பர்.

அதனைத்தவிர்த்து ரணில் சந்திரிகா தேர்தல் ஒன்றுக்கு போகும் வரை மௌனமாக இருந்தது மீண்டும் பக்கச் சார்பற்ற மக்கள் வெறுப்படைந்துள்ள அரசியல் யுத்தகளத்துக்கு இட்டுச்செல்வதற்கே. இன்று சந்திரிகா பாராளுமன்றைக் கலைத்து தேர்தல் ஒன்றுக்கு நாட்டை இட்டுச்சென்றது அந்த தேர்தல் களத்திலிருந்தே. முன்னைய தேர்தலில் தோல்வி கண்ட இரு எம்.பிக்களை அமைச்சராக்கியதும் அந்தப்போரில் இருந்தே அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைத்ததும் அதிலிருந்தே. இதன் மூலம் அவர் தனது அதிகாரத்தை காட்ட நினைக்கின்றார். ஜே.வி.பியை இணைத்ததுக்கும் இந்த அதிகாரத்துக்கும் ஐ.தே.முன்னணி அஞ்சினாலும்பெரும் பாலானமக்கள் எதை நினைக்கின்றார்கள் என்று இப்போது சொல்ல முடியாது. இன்று ஆளும் ஐ.தே. கட்சியும் பொ.ஐ.மு.-ஜே.வி.பி.கூட்டு எதிர்க்கட்சியும் போட்டியிடுவது என்று இல்லாமல் எதிர்க்கட்சியான ஐ.தே.க.வும் ஆளும்கட்சியான ஐ.ம.சு.முன்னணியும் போட்டியிடுவதாகவே எண்ணத்தோன்றுகிறது. ரணிலும் எதிர்க்கட்சித் தலைவராகவே நடிக்கிறார்.அதற்குக்காரணம் அஞ்சுகின்ற கட்சியினரை வெல்லுவதற்கன்றி மூன்று அமைச்சுக்களைப் பறித்தெடுத்தடுடன் பிரச்சினையை தோற்றுவித்ததால் துன்பத்திற்கும் வைராக்கியத்துக்கும் ஆளாகிகுரோத சிந்தனையுடன் நோக்குகின்ற மக்களை வெல்லுவதே.

ரணில் சந்திரிகாவை பொறிக்குள் தள்ளியிருக்கின்றார் என்பது அதனையே உண்மையில் சந்திரிகா ரணிலுக்கு பொறிவைத்துள்ளாரா ரணில் சந்திரிகாவுக்கு பொறிவைத்துள்ளாரா என்பது ஏப்ரல் 3ஆம் திகதி தெரிந்து விடும்.

★★★★★

# அரச பாடசாலைகளுக்கு இருமாத விடுமுறை
# சிறிலங்காவின் கல்வியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

பொதுத்தேர்தல் காரணமாக அரசாங்கப் பாடசாலைகளுக்கு சுமார் இரண்டு மாத விடுமுறை வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

1991 ம் ஆண்டிலும் 2001 ம் ஆண்டிலும் இவ்வாறான நிலைமையே ஏற்பட்டிருந்தது. எதிர் வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெற விருப்பதாலும் அதே மாதம் 24 ஆம்திகதி வடமேல் மாகாண சபைத்தேர்தலை நடத்த உத்தேசிக்கப்பட்டிருப்பதாலும் திட்டமிடப்பட்டிருந்த கல்விப் பொதுத்தராதர உயர் தரப் பரீட்சை ஒத்தி வைக்கப்பட்டுளளது. இந்தப்பரீட்சை எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. எனவே எதிர்வரும் ஏப்ரல் மாதம் மூடப்படும் அரசாங்க பாடசாலைகள் யூன் மாதமே திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(32)

# முல்லையில் கமக்காரர் தலைமைத்துவ பயிற்சிநெறி

(முல்லைத்தீவு)

முல்லைமாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினரால் மாவட்டத்திலுள்ள கமக்காரர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறி நடத்தப்பட்டது.

இதில் கடந்த 10ம் திகதி அன்று உடையார்கட்டுப்பகுதி கமக்காரர்களுக்கும் 12ம்திகதி அன்று முள்ளியவளைக் கமக்காரர்களுக்கும், 13ம் திகதி அன்று ஒலுமடுப்பகுதிக் கமக்காரர்களுக்கும் பயிற்சி நடைபெற்றது தொடர்ந்து 7கமக்கார அமைப்புப் பிரிவுக்கும் மொத்தமாக 10 கமநல மத்திய நிலைய கமக் காரர்களுக்கான பயிற்சி நடாத் தப்படவுள்ளது.

ஒரு அமர்வில் 50 கமக்காரர்கள் வீதம் கலந்து கொள்கின்றனர். இப்பயிற்சி நெறியானது முல்லைமாவட்ட கமநல அபிவிருத்திஉதவி ஆணையாளர் தர்மலிங்கம்தலைமையில் நடைபெறுவதோடு பயிற்சிகளை துறை சார்ந்த வல்லுனர்கள் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (20)

# அரசியல் கட்சிகளது தேர்தல் பிரச்சாரத்தின் ஆரம்பமே அச்சத்தை ஏற்படுத்துவதாக உள்ளது

## -தேசிய சமாதானப் பேரவை கவலை

(கொழும்பு)

**யுத்தநிறுத்தம் முறிவடைந்துவிடும், நாடு பிரிந்து விடும், சமூகத்தினால் மற்றொரு சமூகத்திற்கு அச்சுறுத்தல் என்ற ரீதியில் அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரச்சாரத்தின் ஆரம்பமே அமைந்திருப்பதாகத் தேசிய சமாதானப் பேரவை கவலை வெளியிட்டுள்ளது.**

சனாதிபதியும், பிரதமரும் போட்டிக் கட்சிகளில் இருந்து வந்திருந்தாலும் கூடப் புரிந்துணர்வு அடிப்படையில் ஒன்றுபட்டுச் செயற்படுவதற்கான உடன்படிக்கை ஒன்றை எட்டத் தவறிவிட்டார்கள்.

உரிய காலத்திற்கு முன்னர் தேர்தலை நாடு எதிர்நோக்கினாலும் இரு கட்சிகளினதும் இணைந்த நடவடிக்கையே இனப்பிரச்சினைத் தீர்வுக்கும், பொருளாதார மற்றும் சனநாயக அபிவிருத்திக்கும் சிறந்த தீர்வாக அமையும். இதற்கு மாறாக எதுவும் நடக்குமானால் பிளவுகளிற்கும், துருவமயப்படுத்தலுக்கும், வறுமைக்குமே வழிவகுக்கும்

தேர்தலின் முடிவு எதுவாக இருந்தாலும் இரு கட்சிகள் இணைந்த அணுகுமுறையே இனப்பிரச்சினை தீர்வுக்கும் நாட்டின் அபிவிருத்திக்குமான வழியாகத் தேர்தலின் பின்னரும் நீடிக்கும்.

இருதரப்பும் தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுக்கும் போது பிரச்சாரமானது இருதரப்பு உறவுகளை மேலும் பாதிக்காது இருப்பதை மனதில் கொள்ள வேண்டும் என்று அறிக்கை மூலம் கூறியுள்ளது.

## மகா சிவராத்திரி

மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி மகாசிவராத்திரிப் பெருவிழா நிகழவுள்ளது. அபிஷேகம், பூசைகள், அர்ச்சனை நிகழ்வுகள் வசந்த மண்டபச் சிறப்பு நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது.

# வீதி ஒழுங்கு பற்றி மாணவர்களுக்கு தமிழீழ காவல்துறை கருத்துரை

(முழங்காவில்)

முழங்காவில் பிரதேசத்தில் வீதி ஒழுங்கு தொடர்பான கருத்துரைகளைப் பாடசாலை மாணவர்களுக்கு முழங்காவில் காவல்துறையினர் நடாத்தி வருகின்றனர்.

முழங்காவில் மகாவித்தியாலய உபஅதிபர் திருமதி கருணாகரன் தலைமையில் இவ்வாறான கருத்தமர்வு அண்மையில் நடைபெற்றது.

மாணவர்களுக்கு வீதி ஒழுங்கு முறை குறித்த கருத்துரைகளை முழங்காவில் காவல் பணிமனைப் பொறுப்பாளர் நா.வதனகுமார் நிகழ்த்தினார்.

தொடர்ந்தும் இவ்வாறான கருத்துரைகள் நடைபெறும் எனத் தெரிவித்துள்ளார்.

# இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியில் கொத்தணி முறையில் வாக்குச்சாவடிகள்

## - தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கான பொதுத்தேர்தல் வாக்குப் பதிவுகள் கொத்தணி முறையில் இடம்பெறவிருப்பதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாதுகாப்புப் பணிகளை உறுதிப்படுத்திக்கொள்ளும் வகையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் முல்லைத்தீவு, மன்னார் ,வவுனியா உட்பட்ட வன்னி மாவட்ட தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் வவுனியா பிரதேச செயலர் அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய வடக்கு கிழக்கு பிரதேச வேட்பு மனுக்கள் குறிப்பிட்ட மாவட்ட செயலகங்களில் ஏற்றுக் கொள்ளப்படும். இதேவேளை தேர்தல் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் பணிகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 17ஆம் திகதி ஆரம்பித்து 24ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதமராக வர மிகுந்த அக்கறையாகவுள்ளேன்

## பொ.ஐ.முன்னணியின் செயலாளர் ஜெயரத்ன கூறுகிறார்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமை க்குமாயின் தாமே பிரதமராக வரமிகுந்த அக்கறையுடன் இருப்பதாக பொ.ஐ. முன்னணியின் செயலாளரும் தற்போது ஊடகத்துறை அமைச்சருமான ஜெயரத்ன கூறியிருக்கின்றார். டெயிலிமிறர் பத்திரிகையாளருடனான சந்திப்பின்போது அவர்மேலும் தெரிவித்திருப்பதாவது;

1951ஆம் ஆண்டில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க சிறில. சுதந்திரக்கட்சியை ஆரம்பித்தபோதிருந்த ஒரேயொரு மூத்த உறுப்பினர் நான்தான் என்ற வகையில் இதற்குப் பொருத்த மானவரெனவும் பிரதமராகத் தன்னை நியமிப்பது என சனாதிபதி சந்திரிகா தெரிவித்திருந்ததையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இளம் வயதினருக்கு வாய்ப்பளிக்கவுள்ளமை பற்றி தெரிவித்துள்ள அவர், இளம் சந்ததியினர் இன்னும் வளர்ச்சியடைய வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# கூட்டமைப்பு ஆட்சியமைக்கும் பட்சத்தில் கதிர்காமருக்கே சிறிலங்கா பிரதமர் பதவி!

## சனாதிபதி சந்திரிகா பேரார்வம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றியீட்டிக் ஆட்சியமைக்கும் பட்சத்தில் அந்த அரசாங்கத்தின் பிரதமராக யாரை நியமிப்பது என்பது தொடர்பில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடத்திய மந்திராலோசனையில் லக்ஷ்மன் கதிர்காமரை பிரதமராக்க ஆர்வம் வெளியிட்டுள்ளார்.

இதனை சனாதிபதி தரப்பிலிருந்து உயரதிகாரி ஒருவர் வெள்ளிக்கிழமை கூறியுள்ளார். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்களான லக்ஷ்மன் கதிர்காமர், ரட்ணசிறி விக்கிரமநாயக்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரில் ஒருவரை நியமிப்பது தொடர்பில் சனாதிபதி தனது ஆலோசகர்களுடன் கலந்தாலோசித்துள்ளார்.

பெரும்பாலும் லக்ஷமன் கதிர்காமரை பிரதமராக நியமிப்பதற்கு சனாதிபதி ஆவல் கொண்டிருப்பதாகவும் லக்ஷ்மன் கதிர்காமரை பிரதமராக்கும் தமது யோசனைக்கு கட்சி மட்டத்தில் கட்சி ஆதரவாளர்கள் மட்டத்தில் எதிர்ப்புக்கள் எழாதென்றே தாம் நம்புவதாகவும் சனாதிபதி இந்தக் கலந்துரையாடலின் போது கருத்துத் தெரிவித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# நியாப்திட்டத்தில் புனரமைக்கப்பட்ட நான்கு குளங்கள் கையளிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் நியாப்திட்டத்தால் புனரமைப்புச் செய்யப்பட்ட நான்கு குளங்கள் கடந்த 12ம் திகதி அன்று கையளிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நியாப்திட்ட இணைப்பாளர் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் மங்கல விளக்கினை புதுக்குடியிருப்பு பிரதே செயலர் தயானந்தா ஏற்றிவை

தமிழீழத் தேசியக் காடியினை முல்லைமாவட்ட மக[illegible]ர் அரசியல் துறை பொறுப்பாளர் செல்வி தமிழ்நிலவு ஏற்றினார்.

தொடர்ந்து குளங்களின் கையளிப்பினை முல்லை மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கமக்கார அமைப்புக்களிடம் கையளிப்பை மேற்கொண்டார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் , தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் (முல்லை மாவட்டம்) அரசியல்துறை (முல்லைமாவட்டம்) பொறுப்பாளர் கமக்காரர் அமைப்புக்களைச் சேர்ந்தோர் கலந்து கொண்டனர்.

இதில் கூழாமுறிப்பு, காஞ்சூரமோட்டை ஆகிய இரு குளங்களும் கமநல அபிவிருத்தி வேலைத திட்டத்தில் கட்டுமானம் நடைபெற்றது.

மருதமடு, இடைக்கட்டுக்குளங்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தினரால் புனரமைக்கப்பட்டு மொத்தம் நான்கு குளங்கள் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(05,20)

# தற்போதைய வரட்சியால் தேயிலை உற்பத்தி வீழ்ச்சி!

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவிவரும் கடும் வரட்சியால் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பெரும் பொருளாதார பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

வரட்சியின் காரணமாக தேயிலை உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளதுடன் பல ஏக்கர் தேயிலை தோட்டங்கள் கருகி வருகின்றன. இதன் காரணமாக தொழிலாளர்களின் வேலை நாட்கள் குறைக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர்களுக்கு மாதாந்தம் 25 நாட்கள் வேலை வழங்கப்படவேண்டும். எனினும் தற்போது மாதத்தில் 20 நாட்களுக்கும் குறைவாகவே தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்படுகின்றது.

மேலும் தொழிலாளர்களின் பொருளாதார பிரச்சினையைத் தீர்ப்பதில் கைகொடுத்த விவசாயப் பயிர்ச்செய்கைகளும் வரட்சியினால் வீழ்ச்சி கண்டுள்ளன. இதனால் ஏற்கனவே பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட தோட்டத் தொழிலாளர்கள் தற்போது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## -மார்ச் 1 முதல் 7 வரையான காலத்தில்

# பாத்தீனியம் செடிகளை அழிக்கும் வாரம் வவுனியா தேசிய எழுச்சி பேரவை தீர்மானம்

வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வில் தீர்மானிக்கப்பட்ட தற்கமைவாக சூழலிற் பாதிப்பை ஏற்படுத்தும் பாத்தீனியச் செடிகளை அழிக்கும் நடவடிக்கை சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு வவுனியா 2ம் குறுக்குப் பகுதியில் வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிச் பேரவை செயலாளா எஸ்.என்.ஜி. நாதன் தலைமையில் அகவணக்கத்துடன் ஆரம்பமானது

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் எழிலன், மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் தங்கையா மற்றும் திணைக்களத் தலைவர்கள், பொது அமைப் புக்களின் பிரதிநிதிகள் தமிழர் புனர்வாழ்வுக்கழகம், தேசிய எழுச்சிப் பேரவையினர், வவுனியா மாவட்ட பிரதேச செயலக உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினர்.

இதில் எதிர்வரும் 01.03.04 - 07.03.04 வரையிலான காலப் பகுதியில் பாத்தீனியச் செடியழிக் கும் வாரமாக பிரகடனப்படுத்தி இக் காலப்பகுதியில் பார்த்தீனியச் செடி அழிப்பதற்கான நடவடிக்கை தொடர்ந்து அது மேற்கொண்டும் வளராதிருப்பதைத் தடுப்பதற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

இதற்கான அனைத்து வேலைத் திட்டங்களும் ஒருங்கமைக்கப்பட்டு இதனை வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினரும் வவுனியா மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளும் நெறிப்படுத்துகின்றனர்.

# மதகு திருத்த நடவடிக்கை வேண்டும்

கிளிநொச்சி கோணாவில் சோலைநகர் கிராமத்திலிருந்து வேறிடங்களுக்குச் செல்வதற்கு ஒரே ஒரு பிரதான வீதி மட்டுமே உள்ளநிலையில் இப்பிரதான வீதியில் உள்ள நீர்ப்பாசன மதகு மிக நீண்ட காலமாகத் திருத்தப்படாது பழுதடைந்த நிலையில் நீர் தேங்கி உள்ளது.

இதனால் மக்கள் போக்குவரத்துக்குப் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இதனை திருத்துவதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா? என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

# உணவு உரிமத்திற்கு விண்ணப்பிக்குக

வன்னிப் பெருநிலப்பரப்பிற்குட்பட்ட உணவு உற்பத்திகள், விற்பனைகள்,களஞ்சியங்கள், ப.நோ.கூ சங்க நுகர்ச்சி விற்பனைகள், நடமாடும் உணவு விற்பனைகள், பல்பொருள் வாணிபங்கள், பல்பொருள் பெட்டிக் கடைகள் உள்ளடங்கலான அனைத்து உணவு கையாளும் நிலையங்களும் தமிழீழ சுகாதார சேவைகளின் 2004 ஆம் ஆண்டிற்கான உணவு உரிமத்திற்கு விண்ணப்பிக்க வேண்டப்பட்டுள்ளது.

15.02.2004 - 15.03.2004வரையான காலப்பகுதிக்குள் பிரதேச மாவட்ட இணைப்பாளர்களிடம் அல்லது மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்ட பணிமனைகளில் விண்ணப்பித்துக் கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# பளை நகரப்பிரதேசத்திற்கு குழாய் மூலம் நீர்வழங்க ஏற்பாடு

(வடமராட்சி கிழக்கு)

பளை நகரப் பிரதேசத்தில் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரின் முயற்சியில் இதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பளை நகரிலிருந்து பளை பேருந்து நிலையம் வரை நிலத்தின் கீழான குழாய் மூலம் குடிநீர் வழங்க 25 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் 'நீர்ப்' வேலைத்திட்ட பொறியியலாளர்கள் இப்பகுதிக்கு சென்று பார்வையிட்டுள்ளனர். உள்ளூராட்சி திணைக்களம் வேலைகளை ஆரம்பிப் பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. (11)

# சி.சு.க-ஜே.வி.பி கூட்டணி அதிருப்தியாளர் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைய முடிவு!

-செயலர் செனரத் கப்பு கொட்டுவ தகவல்

(கொழும்பு)

**பொது சன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த ஏழு உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொள்ளவுள்ளார்கள்.**

முக்கிய மாவட்டங்களைச் சேர்ந்த பொது சன ஐக்கிய முன்னணியின் மீதான உறுப்பினர்களே இவ்வாறு இணைந்துகொள்ளவுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் செயலாளர் செனரத் கப்பு கொட்டுவ கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்துகொள்ளவிருக்கின்ற ஏழு உறுப்பினர்களுக்கும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்குரிய வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரிய வருகின்றது.

ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து கொள்ளவிருப்பவர்களில் மூன்று பேர் பொது சன ஐக்கிய முன்னணியின் முன்னாள் முக்கிய அமைச்சர்கள் என்றும் கூறப்படுகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட ஐக்கிய தேசிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளவுள்ளார்கள்.

பொதுசன ஐக்கிய முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அத்துல நிமலசிறி ஜயசிங்க இணைந்து கொண்டதையடுத்து கம்பஹா மாவட்டத்தின் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பாகப் போட்டியிடவிருந்த ரவீந்திர ரந்தெனியவிற்கு இடம் கிடைக்குமா? என்பதில் சந்தேகம் கிளம்பியுள்ளது.

# 'அம்டா' குடாநாட்டில் பணிகளை நிறுத்த முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு வருடமாக புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த ஜப்பானிய அரச சார்பற்ற நிறுவனமாகிய "அம்டா" எதிர்வரும் மார்ச் மாதத்துடன் அதன் பணிகளை நிறுத்திக்கொள்ளவுள்ளது.

இது தொடர்பாக அறிவுறுத்தல் ஜப்பானிலுள்ள மேற்படி நிறுவனத்தின் தலைமையகத்தில் இருந்து யாழ்ப்பாண அலுவலகத்திற்குக் கிடைத்துள்ளதாக அறியப்படுகின்றது.

எனினும், இவ் அலுவலகத்தினை மூடுவதற்கான காரணம் எதுவும் இதுவரை தெரியவில்லை.

# ஹெரோயின் கடத்திய நபர் பொலிசாரால் கைது!

(கொழும்பு)

நீர்கொழும்பிலிருந்து கொழும்பை நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்றில் 15 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள் கடத்தி வந்த நபரைப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் கைதுசெய்துள்ளார்கள்

வியாழக்கிழமை அதிகாலை நீர்கொழும்பு-கொழும்பு பிரதான வீதியில் இந்த நபரை கட்டுநாயக்க விமான நிலையப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

# தேர்தல் நடைபெறும் காலப்பகுதியில் கண்காணிப்புக் குழுப் பணிகள் அதிகரிப்பு

-பேச்சாளர் அக்னஸ் பிரகொறிற்

(கொழும்பு)

தேர்தலைக் கண்காணிப்பது எமது பணியல்ல. ஆனாலும் தேர்தல் நடைபெறும் காலத்தில் பலத்த முறுகல் நிலை உருவாகுமென்பதால் அக்காலப் பகுதியில் எமது கண்காணிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்படும் எனப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கூறியுள்ளார்கள்.

இதுபற்றிக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரகொறிற் கூறுகையில்:-

விரைவில் மாவட்ட கண்காணிப்புக் குழுவினருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கமையக் கண்காணிப்பாளர்கள் தங்கள் செயற்பாடுகளை மேற்கொள்வர்.

கடந்தவாரம் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் டொண்ட் புறூவ் ஹொவ்டே இவ்வாரம் வடபகுதிக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# பசுமாடுகளை இறைச்சிக்கு வெட்டுவோர் மீது நடவடிக்கை!

(வடமராட்சி)

பசுமாடுகளை இறைச்சிக்காக வெட்டுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பச்சிலைப்பள்ளி பிரதேசசபை அறிவித்துள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட இறைச்சிக்கடைகளில் பசுமாடுகள் இறைச்சிக்கு வெட்டப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே 15-02-04 முதல் இது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இதை மீறிச் செயற்படுவோர்களின் கடை உரிமை இரத்துச் செய்யப்படுவதுடன் குறித்த நபர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (11)

# நீர்த்தொட்டி திருகிகள் மீண்டும் திருட்டு நகரில் குடிநீர் விநியோகம் பாதிப்பு

(வடமராட்சி)

பளை நகர்ப் பகுதியில் குடிநீர்த் தொட்டியிலுள்ள நீர் விநியோக திருகிகள் மீண்டும் விசமிகளால் திருடப்பட்டுள்ளது.

யுனிசெப் நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட நீர்த்தொட்டி அண்மையில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்தது.

கடந்த 7 ஆம் திகதி இனந்தெரியாத விசமிகளால் இந்த நீர்த் தொட்டியின், திருகிகள் திருடப்பட்டுள்ளன. இதனால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டிருந்தது.

இதேசமயம், இதற்கு முன்னரும் ஒரு தடவை இந்தத் திருகிகள் களவாடப்பட்டிருந்த வேளை, பிரதேச சபையினர் புதிதாகத் திருகிகளை வாங்கிப் போட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (11)

# தொழில்நுட்ப உத்தியோகத்தர் பயிற்சி நெறி

புதிதாக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறி முல்லை.மாவட்டப் பிராந்திய உள்ளூராட்சி· உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

மங்கல விளக்கினை துரைலிங்கம் ( கட்டடங்கள் திணைக்களம்), திருமதி நேசரட்ணம்-சுகிர்தா, (கரைதுறைப்பற்று பிரதேச சபைச் செயலாளர்) ஏற்றிவைத்தனர்.

இப்பயிற்சி நெறியானது நிர்மாண வேலைகளை இம் மாவட்டத்தில் திறமையாக செய்து முடிப்பதற்கே நடைபெறுவதாகப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்தார். (20)

# கொள்ளையரிடம் மீட்ட பணத்தை கையாடிய பொலிஸ் அதிகாரி கைது!

(கொழும்பு)

சிலாபம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சிலாபத்தில் இடம்பெற்ற ஒரு கோடி ரூபா கொள்ளைச் சம்பவத்தையடுத்து மீட்கப்பட்ட 54 இலட்ச ரூபாவில் நாலு இலட்சம் ரூபாவைக் கையாடிய குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கையாடல் புலனாய்வுத் தகவல்கள் மூலமே தெரியவந்துள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது.

# பயிற்சி ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வேண்டும்

-மாகாணக் கல்வி அமைச்சிடம் கோரல்

தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள 1.250ரூபா சம்பள உயர்வு பயிற்சி ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டும். இதுவிடயத்தில் உரிய பதில் கிடைக்காது விட்டால் கல்வி நடவடிக்கைகளை இம்மாதம் 25ம் திகதியிலிருந்து பகிஸ்கரிப்பு செய்யப் போவதாக மட்டக்களப்பு அரசினர் கலாசாலை ஆசிரியர்கள் வடக்கு கிழக்கு மாகாண கல்விபண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு கடித மூலம் தெரிவித்துள்ளனர்.

மேலும் மட்டக்களப்பு, கல்குடா வலய ஆசிரியர்களுக்கு மட்டுமே ஆசிரியர்சேவை தரம் 3-11ற்கான நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதன் காரணமாக பல் வேறுமாவட்டங்களிலிருந்து வந்து பயிற்சி பெறும் ஆசிரியர்கள் பொருளாதர ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் பாதிக்கப் பட்டநிலையில் உள்ளனர்.

இதுதொடர்பாக வலயக்கல்வித் திணைக்களங்களும், கல்வி அதிகாரிகளும் அசமந்தப் போக்கையே காட்டுகின்றனர். ஆசிரிய சங்கங்களும் எமது பிரச்சினைக்கு எதுவித அக்கறையும் கொள்ளவில்லை என்றும் அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

# ஐம்பது வீடுகளில் கொள்ளையிட்டவர் கைது

(கொழும்பு)

நச்சு வாயுக்களை உபயோகித்து இதுவரை 50 வீடுகளை உடைத்துக் கொள்ளையிட்டு வந்த நபரை குருநாகல் பொலிசார் சனிக்கிழமை கைது செய்துள்ளனர்.

இந்த நபரிடமிருந்து 10 இலட்சம் ரூபா ரொக்கப் பணமும் செலுலர் தொலைபேசிகள் என்பவற்றையும் பொலிசார் பறிமுதல் செய்துள்ளனர்.


## இயலவிற்பனை

## (ஏல விற்பனை)

01. உந்துருளிகள்

*இயங்கும் நிலை

*உதிரிகளாக்கும் நிலை

02. பார்வையிடும் காலம்:- 14,15,16,-02-2004

இயலம் விடப்படும் நாள்:-17 - 02 - 2004

இடம் :- பாண்டியன் ஊர்தி விற்பனை நிலையம், கரடிப்போக்குச்சந்தி, கிளிநொச்சி.

(3984)


## 6 ஆம் ஆண்டு நினைவில்

தாயின் மடியில்
28
□
08
□
1975



தாயக விடிவில்
16
□
02
□
1998

## மேஜர் கலியுகன்


### வேலாயுதம் அண்ணாத்துரை

தேமதுரத் தமிழ் மண்ணின் தேச விடியலுக்காய்
விடுதலைக் குயிலாய், விடியலின் ஒளியாய்
வித்தாகிப் போனவனே வீரமறவனே
புதைகுழியில் புகுந்தாலும்
புன்னகைக்கும் இன்முகம் புதையாதண்ணா
மண்ணை நீ நேசித்தது போல்-மாவீரனே
உம்மையும் நாம் நேசித்தோம்.
ஆறாண்டானாலும் அழிந்திடாது உம் நினைவு.

உம் பாதையில்
அன்புத் தங்கைபோராளி
சுகுணா/கலைவிழி,
அப்பா,அம்மா,
சகோதரர்கள்.

க.வேலாயுதம்
கனகராயன்குளம்,
வவுனியா.

(3987)



## சிந்தனைக்கு

இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதி பூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 16 -02-2004

## அநுராவின் எதிர்வுகூறல்!

நாட்டின் ஐக்கியம், பாதுகாப்பு என்பன எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் அளிக்கும் ஆணையில் தான் தங்கியுள்ளதென சனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகர்களில் ஒருவரும், சகோதரருமான அநுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளமை முற்றிலும் சரியானதொரு எதிர்வுகூறலே. ஆனால், அவர் கூறியுள்ள அர்த்தத்தில் இவ் எதிர்வுகூறல் அர்த்தம் கொள்ளத்தக்கதல்ல.

இப் பொதுத் தேர்தலானது, சிறிலங்காவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகும் தேர்தல் எனில் மிகையல்ல. ஏனெனில் இத் தேர்தலானது எதிர்காலத்தில் இனப் பிரச்சினைக்குச் சமாதான வழிமுறையில் அரசியல் தீர்வா, அன்றி இராணுவ ரீதியிலான அணுகுமுறையில் வெடிக்கப் போகும் யுத்தமா என்பதைப் பெரும்பாலும் தீர்மானிக்கும் ஒன்றாகவே இருக்கும்.

சனாதிபதி சந்திரிகாவும்–அவரது பொ.ஐ.முன்னணியும் இனப் பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் எனக் கூறிக்கொண்டாலும் இது நடைமுறையில் சாத்தியமாவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் அரிதே ஆகும். ஏனெனில், சனாதிபதி சந்திரிகாவோ அன்றி அவரது கூட்டணியோ அதற்கு ஏற்றவையானதாக இல்லை.

சனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகளுக்குத்தனது ஆதரவு உண்டுஎனக்கூறிக்கொண்டாலும்–பிரதமர்ரணில்விக்கிரமசிங்க சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பொறுப்பேற்று நடத்துமாறு விடுத்த கோரிக்கையை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு எனக் கூறும் அவர் ஏன் அவ்வாறு நடந்துகொள்ளவில்லை. அதாவது சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியவில்லை.

சனாதிபதி என்ற ரீதியில் நிறைவேற்று அதிகாரம் அவரிடம் உண்டு, முப்படைகளின் தளபதி என்ற ரீதியிலும், முப்படைகளுக்கும் கட்டளை இடும் அதிகாரமும் உண்டு. அதற்கு அப்பால், ஐ.தே.முன்ன்ணி அரசாங்கத்திடம் பறித்தெடுக்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சும் அவரிடம் உண்டு. இவ்வாறாக அதிகாரம் கொட்டிக் கிடந்தும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை அவர் முன்னெடுக்க முடியாது போனது ஏன்?

சனாதிபதியுடன் தற்பொழுது கூட்டுச் சேர்ந்துள்ள ஜே.வி.பி. சமாதான முயற்சிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்காததே காரணம் ஆகும். ஜே.வி.பி தற்போதைய நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவு தெரிவித்து வரினும், அக்கட்சி இனப்பிரச்சினைக்கான தீர்விற்கு யதார்த்தபூர்வமான செயலுக்குத் தயாராக இல்லை என்பதே உண்மை. இவை எழுந்தமானத்திலான குற்றச்சாட்டல்ல.

சிறிலங்கா தந்திரக்கட்சியுடன் கூட்டுச் சேர்வதற்காகச் சுமார் ஓராண்டு காலம் பேச்சுவார்த்தை நடாத்திய ஜே.வி.பி.யினால், இனப் பிரச்சினை தீர்வு குறித்த விடயத்தில் சுதந்திரக் கட்சியின் குறைந்த மட்ட யோசனைகளுக்குக் கூட இணக்கப்பாட்டிற்கு வர முடியவில்லை. இந்நிலையில் இனப் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தை மேசையில் அதனால் எவ்வாறு இணக்கப்பாட்டிற்கு வரமுடியும்?

அடுத்ததாக, இனப் பிரச்சினை தீர்வு தொடர்பான விடயத்தில், விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான நகல் திட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில், சமாதானப் பேச்சுவார்த்தைகள் அடுத்த கட்ட நகர்விற்குச் செல்வதற்கு இதில் முன்னேற்றம் காண்பது அவசியமானதாகும். ஆனால், இந்நகல் திட்டத்தை ஜே.வி.பி முற்றாகவே நிராகரித்துள்ளது. இந்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதென்பது இலகுவானதொரு காரியமல்ல.

இவற்றின் காரணமாகவே சனாதிபதி சந்திரிகாவினால் பிரதமர் வலியுறுத்தியும்–ஒருவகையில் சவால்விட்டது போன்றதொரு தொனியில் பேசியும் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியாமல் போய்விட்டது. இத்தகையதொரு சூழ்நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி–ஜே.வி.பி.கூட்டணி தேர்தலில் வெற்றிபெறின் எவ்வாறு சமாதான முயற்சிகளை அவர்களால் முன்னெடுக்க முடியும். அவ்வாறு முன்னெடுக்க முடியுமானால், சமாதான முயற்சிகளைக் கெடுத்தவர்கள் என்று தற்பொழுது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபடும் நோக்கிலாவது தற்பொழுது சமாதான முயற்சிகளை முன்னெடுத்திருக்கலாம் அல்லவா?

ஆகையினால் பொதுத் தேர்தலில் சு.கட்சி–ஜே.வி.பி.கூட்டணி வெற்றிபெறுமானால், நாட்டை அக்கூட்டணி யுத்தத்தை நோக்கி வழிநடத்திச் செல்வது தடுக்கப்பட முடியாததொன்றாகிவிடும். இந்த வகையில் யுத்தம் ஒன்று மூளுமானால், இலங்கையின் ஐக்கியம், பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாவது தவிர்க்கப்பட முடியாததாகவே இருக்கும்.

ஆகையினால், மக்கள் இம்முறை தேர்தலின் மூலம் வழங்கும் ஆணை நாட்டின் ஐக்கியம், பாதுகாப்பு என்பனவற்றைத் தீர்மானிப்பதாக இருக்கும் என்பதில் சந்தேகப்பட எதுவுமில்லை. மக்கள் சமாதானத்திற்கு ஆதரவான சக்திகளுக்கு வாக்களிப்பின் நாட்டின் ஐக்கியம், பாதுகாப்பு என்பன உறுதிப்படுவதாகவும், தேர்தலுக்காக சமாதானம் குறித்துப் பேசுபவர்களுக்கு வாக்களிப்பின நாட்டின் ஐக்கியம்,பாதுகாப்பு கேள்விக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

# பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கு விசேட பாதுகாப்பு நடைமுறை அமுல்!

### -பொலிஸ் தேர்தல் செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கென விசேட பாதுகாப்பு நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பொலிஸ் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

இச்செயலகத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்; தேர்தலின் போது சுமார் 55 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பார்களெனத் தெரிவித்துள்ளார்.

வாக்குச்சாவடிகளில் மட்டும் 33 ஆயிரம் பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். வேட்பு மனுத் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பிருந்து தேர்தல் முடியும் வரை இப்பாதுகாப்புத் திட்டம் அமுலில் இருக்கும். பொலிஸ்மா அதிபர் பாதுகாப்பு நடவடிக்கைகளை நேரடியாக மேற்பார்வை செய்வார் என்றும் அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

# தேர்தல் நடவடிக்கைக்கு அரச வாகனங்கள் தடுக்க நீதிமன்றத்தை நாட ஏற்பாடு

(கொழும்பு)

அமைச்சுக்கள்,மாகாண சபைகள் போன்ற அரச நிறுவனங்களுக்குச சொந்தமான வாகனங்களைத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு உபயோகிப்பதைத் தடை செய்யும் உத்தரவை நீதிமன்றத்தில் கோரவுள்ளதாக அரசியல் வன்முறைகளைக் கண்காணிக்கும் குழுவினர் பணிப்பாளர் பாக்கிய சோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார். இதனை மீறும் அமைச்சுக்களின் திணைக்களங்களின் உயர் அதிகாரிகளுக்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்துத் தண்டனை வழங்குவது இதன் நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியிலேயே அதிக நம்பிக்கையை வைத்துள்ளோம்

### மு.கா.வின் அதாவுல்லா பிரிவு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதாவுல்லா பிரிவு பொதுத் தேர்தலில் எந்தப் பக்கம் இணைவது என்பது குறித்து முடிவெடுக்காதுள்ளது.

இது தொடர்பாக அதாவுல்லா பத்திரிகைக்கு தெரிவிப்பதாவது, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் இனத்தவரில் பெரும்பாலானோர் தமது கட்சியைச் சேர்ந்தவர்களென்றும் இரு பிரதான கட்சிகளில்ஒன்றிலேனும் சேரவில்லை எனவும் தெரிவித்துள்ளார். சரியான முறையில் ஆட்சியைக் கைப்பற்றும் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் எந்த அரசுடனும் இணைவதாகத் தெரிவித்துள்ள அதாவுல்லா தான் நம்பிக்கை வைத்திருப்பது தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியிலேயே என்றும் தெரி வித்துள்ளார்.

# 35 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் செலவிற்காக கடன்பெற முயற்சி

(கொழும்பு)

ஆளும் கட்சி எம்.பிக்களும், எதிர்க்கட்சி எம்.பிக்களுமாக35 பேர் பாராளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள வங்கியில் தேர்தல் செலவுகளுக்காக கடன் தொகை கோரியுள்ளனர்.

எதிர்பாராது நடைபெறவுள்ள இத்தேர்தலுக்கு முகம்கொடுக்க வேண்டியதால் மேற்படி கடன் கோரப்பட்டுள்ளது.

இதன் தொகை பத்து லட்சம் வரையாகும். குறைந்தளவு ஒருவருக்கு 2 லட்சம் ரூபாவாவது தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கடன் கோரியிருப்பவர்களில் ஆளும் கட்சியிலுள்ள அமைச்சரவை அந்தஸ்து பெறாத அமைச்சர்களும் எம்.பி.க்கள் இருவரும் அடங்குவர். அத்துடன் இவர்கள் பெரும்பாலும் கிராமப் புறங்களைப் பிரதிநிதித்துவம் செய்பவர்கள் என்று கூறப்படுகிறது.

# ஷேன் வோர்னின் ஆசை

சிறிலங்காவில் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலிய அணியில் இடம்பெற வேண்டும் என்பதே எனது விருப்பம் என்று அவுஸ்திரேலிய அணியின் சுழற் பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் கூறியுள்ளார்.

ஊக்க மருந்து உட்கொண்ட குற்றத்திற்காக ஓராண்டு காலம் கிரிக்கெட் விளையாடுவதற்கு விதிக்கப்பட்ட தடை முடிந்த பிற்பாடு கடந்த செவ்வாய்க் கிழமை முதல் கிரிக்கெட் விளையாடத் தொடங்கிய ஷேன் வோர்ன் கடந்த புதன்கிழமை விக்டோரியா அணிக்காக குயின்ஸ்லாந்து கிரிக்கெட் அணியை எதிர்த்துப் பந்து வீசினார்.

16ஓவர்கள் வீசிய வோர்ன் அதில்32 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தி தன்னுடைய மறு பிரவேசத்தைக் கொண்டாடினார். நாம் எதை விரும்புகிறோமோ அது நம்மிடம் இருந்து பறிக்கப்படும் போது தான் அதன் அருமையை நாம் உணர்கின்றோம். அந்தவகையில் கிரிக்கெட்டின் மகத்துவத்தை இந்த ஓராண்டு காலத்தில் நான் நன்கு புரிந்து கொண்டேன் எனத் தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவில் நடைபெறவுள்ள ஒருநாள் போட்டித் தொடரில் ஷேன் வோர்ன் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



அவுஸ்திரேலியாவின் கடந்த ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரருக்குரிய 'அலன்போடர்' விருது அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ரிக்கி பொண்டிங இற்கு வழங்கப்பட்டது. இவ்விருதுடன் காணப்படும் ரிக்கி பொண்டிங், இவ்விருதைப் பெறுவது இரண்டாவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆஸி. தொடரில் நிறைய அனுபவங்களைப் பெற்றேன்

### – ஆரம்ப துடுப்பாட்ட வீரர் செவாக்

அவுஸ்திரேலிய சுற்றுப்பயணம் நிறைய அனுபவங்களைத் தந்ததாகவும் இனிவரும் போட்டிகளில் இந்த அனுபவம் பெரிதும் கைகொடுக்கும் என்றும் இந்திய கிரிக்கெட் அணியின் தொடக்க ஆட்டக்காரர் செவாக் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நடைபெறும் ரஞ்சி கிண்ண ஒருநாள் போட்டிகளில் விளையாடி வரும் செவாக் ராஜஸ்தான் அணியுடன் நடந்த போட்டியில் வெற்றி பெற்றபின்னர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்; நீண்ட பயணமாக இருந்தாலும் அவுஸ்திரேலிய தொடர் எனக்கு பயனுள்ளதாக அமைந்தது. அவர்களது மைதானங்களில் எப்படி விளையாட வேண்டும் என்ற அனுபவத்தையும் எனக்குத் தந்துள்ளது. முத்தரப்பு இறுதிப்போட்டியில் தோல்வியைத் தழுவியது உண்மைதான். இதை தவிர்த்துப் பார்த்தால் நாங்கள் அவுஸ்திரேலிய தொடரில் அசத்தலாகவே ஆடி இருக்கிறோம் என்றார்.



### இந்திய மீனவர்களைப் பிடித்துச் சென்ற

# வடமராட்சி மீனவர்கள் மீது சிறில. படையினர் தாக்குதல்

(வடமராட்சி)

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்களை அண்மையில் பிடித்து வந்திருந்த உள்ளூர் மீனவ சங்கப் பிரதிநிதிகள் சிலர் நேற்றுப் படையினரால் தாக்கப்பட்டுள்ளனர். விசாரணைக்கென பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டவர்களை அங்கிருந்து பிடித்துச் சென்ற படையினர் தமது முகாமினுள் வைத்துத் தாக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக, அண்மையில் இன்பருட்டி கடற்பரப்பில் வைத்து இந்திய மீனவர்கள் 27 பேர் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கென, அப்பகுதி மீனவ சங்கத் தலைவர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத திற்கு அழைக்கப்பட்டிருந்தார். அவரிடம் குறித்த சம்பவத்தினில் தொடர்புடையவர்கள் எனக் கூறப்பட்ட மீனவ சங்கப் பிரதிநிதிகள் எஞ்சியோரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வருமாறு பணிக்கப்பட்டிருந்தது.

இப்பணிப்பினையடுத்து நேற்றையதினம் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற மீனவ சங்கப் பிரதிநிதிகள் நால்வருமே படையினரின் தாக்குதலிற்குள்ளாகினர். இந்திய மீனவர்கள் இக்கடற்பரப்பினுள் வந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதை உள்ளூர் மீனவர்கள் தடுக்கக்கூடாதெனவும், அதற்கான அங்கீகாரம் அவர்களுக்கு இல்லையெனவும் கூறியே தாம் தாக்கப்பட்டதாக அம்மீனவர்கள் கூறுகின்றனர் இது தொடர்பாக மீனவ சங்கங்களின் சமாசத்தின் கவனத்திற்கும் அவர்கள் கொண்டு வந்துள்ளனர். (27)

# 'சுதந்திரப் பறவைகள்' ஏடு இன்று வெளிவருகின்றது

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான "சுதந்திரப் பறவைகள்" தைமாத இதழ் இன்று வெளிவருகிறது.

இதில் தீப்பொறி எழுதிய ஒரு கதை விளம்பியின் கதையிது. கலைத தமிழ் எழுதிய தென்னாபிரிக்க போராட்ட வரலாற்றில் பெண்களின் பங்கு, தீபனா எழுதிய "கனவுகள் கைகூடும்காலம்" அ.காந்தா எழுதிய "தணியாத தணிகா", காயத்திரி இராஜேஸ்வரன் எழுதிய "முகம் மாறும் மனிதர்களும், முகம் மறந்த உதவிகளும்", அகநிலா எழுதிய வித்துடல், மாற்று போன்ற ஆக்கங்களுடன் கவிதை, சிறுகதைகளுடன் அம்புலியின் எழுதிய "அழகிய மனங்கள் வேண்டும் எங்களுக்கு" என்பன இடம்பெற்றுள்ளது.

# சீனாவில் இரு தீவிபத்துகளில் 90க்கு மேற்பட்டோர் பலி

(லண்டன்)

சீனாவில் நடந்த இரு வேறு தீவிபத்துக்களில் குறைந்தது 90 பேர் பலியாகி உள்ளனர். பலர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

சீனாவின் வடகிழக்கு நகரான ஜெனீமில் கடைக் கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட தீயினால் 51 பேர் பலியாகினர். இத் தீயானது ஐந்து மாடிகளைக் கொண்ட கடைத் தொகுதி ஒன்றில் ஏற்பட்டது. இதன்போது 70 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இவர்களில் சிலர் தீயணைப்புப் படையினர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்தத் தீவிபத்து நிகழ்ந்து ஒரு சில மணிநேரத்தில் கிழக்குச் சீனாவில் இராமர் கோவில் ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் 39 பேர் பலியாகியுள்ளனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# தேர்தல் தொடர்பான செயற்பாட்டில் கண்காணிப்புக்குழு ஈடுபடாது

### யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு பேச்சாளர்

(கொழும்பு)

யுத்த கண்காணிப்புக்குழு யுத்த நிறுத்த நடவடிக்கைகளை மட்டும் கண்காணிக்குமே தவிர பொதுத தேர்தலை அல்லவென யுத்த கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னஸ் தெரிவித்தார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் உரிய முறையில் கண்காணிக்கப்படுமே தவிர பொதுத்தேர்தல் தொடர்பான எந்தவிதமான செயற்பாட்டிலும் அது இறங்காது என அவர் தெரி வித்தார்.

அதேவேளை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் புறூவ்ஹொவ்டே இன்று யாழ்ப்பாணத்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு செல்லவுள்ளார்.

இந்த மாதத்தில் மீண்டும் பதவியேற்ற இவர் யாழ்ப்பாணத்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொள்வது இதுவே முதல்முறை என்பது குறிபபிடத்தக்கது.

அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் அடுத்தவாரம் கிளிநொச்சியில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் யுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் கிழக்கு மாகாணத்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த பொழுது இராணுவ உயர் அதிகாரிகளையும், தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (32)

# ஈராக்கிற்கு ஏற்றுமதியாகவிருந்த தரமற்ற தேயிலை கொழும்பில் கண்டுபிடிப்பு

ஈராக் மற்றும் மத்திய கிழக்கிற்கு ஏற்றுமதி செய்வதற்காக சேகரித்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகை தரமற்ற தேயிலை கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்று சுமார் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் கிலோகிராம் தேயிலை இவ்வாறு கைப்பற்றப்பட்டதாக கொழும்பு குற்றத்தடுப்புப் பணியகம் அறிவித்துள்ளது. இது தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.ஏற்கனவே, இவ்வாறு பலதடவைகள் தரமற்ற தேயிலைத் தொகுதிகள் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (32)

## எந்தச்...

தெரிவித்துள்ளார்.

இதேவேளை தொகுதிப் பங்கீடுகள் குறித்தும் புதன் கிழமை நடைபெறும் கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமெனவும் தெரி வித்துள்ளார்.

# காத்தான்குடி கடலில் குளிக்கச்சென்ற மூவர் மரணம்

(மட்டக்களப்பு)

காத்தான்குடி கடலில் குளிக்கச் சென்ற மூவர் மரணமாகியுள்ளனர். இந்தச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. ஏற்கனவே எச்சரிக்கை செய்யப்பட்டிருந்த ஆழமான கடற்பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சடலங்களை மீட்க முடியாதநிலை ஏற்பட்டிருப்பதால் திருகோணமலையிலிருந்து பாரிய மீட்பு உபகரணங்களுடன் கடற்படை அணியொன்று காத்தான் குடிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மொகமது பஸ்மின் (வயது19), 18வயதான மொகமத் பிந்தெனஸ் மற்றும் 18வயதான இப்ரகிம் ஆகியோரே மரணமானவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. (32)

## உள்ளூராட்சி..

இதனையடுத்தே உள்ளூராட்சி தேர்தல் குறித்து ஆராயப்பட்டது. ஏற்கனவே இந்தத் தேர்தலை ரத்துச் செய்யக் கோரி வாக்காளர்கள் நால்வர் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருப்பதும் குறிப்பிடத் தக்கது. (32)

## போர்..

இதேவேளை, ஜே.வி.பி. தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள நிலையில் இவ்வாறு தெரிவித்துள்ளது குறிப்பிடத் தக்கது.

## நிறைவேற்று..

படவுள்ளது. இந்த சர்வசன வாக்கெடுப்பு எதிர்வரும் ஜுலை மாதத்தில் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமற்செய்து அரசியலமைப்பு அதிகாரங்களுடன் சனாதிபதி பிரதம மந்திரியாக நாடாளுமன்றத்திற்குச் செல்லும் வகையிலேயே இந்த சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (32)

## யாழ்..

சூழ்நிலையிலே நெருக்கடியான இந்தக் காலகட்டத்தில் இருக்கின்ற ஒற்றுமையை சீர்குலைக்கக் கூடாது என்ற நோக்கத்துடனும், ஒற்றுமையைப் பலப்படுத்த வேண்டும் அதற்கான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்ற ஒரு உயர்ந்த நோக்கத்திற்காகவும் ஓர் அர்ப்பணிப்புடன் இந்த இடத்தில் இருந்து ஒதுங்குவதற்குத் தீர்மானித்துள்ளேன் என்றும் குறிப்பிட்டார்.

முன்னதாக இது தொடர்பாக அறிவிப்பை மகேஸ்வரன் காரைநகரில் இடம்பெற்ற பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமைப் பணிமனைத் திறப்பு விழாவில் விடுத்திருந்தார். (27)

## நீதிமன்றம்..

திகதி நியமனக் குழுவைக் கூட்டப் போவதாக சம்பந்தன் அறிவித்துள்ளார். நான் கூட்டச் சொன்னது செயற்குழுவை. ஆனால், அவர் நியமனக் குழுவைக் கூட்டப் போவதாகக் கூறியுள்ளார்.

இதேவேளை, மட்டக்களப்பிற்கும், திருகோணமலைக்கும் ஆட்களை நியமித்துவிட்டார். வெறும் கண்துடைப்பிற்காகவே நியமனக் கூட்டத்தைக் கூட்டப் போவதாகக் கூறுகின்றார் எனவும் ஆனந்த சங்கரி குற்றம்சாட்டியுள்ளார்.

இதேவேளை, இக்கடிதம் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில், அவருடைய கடிதத்திற்கு செயலாளர் நாயகம் பதிலளிக்க வேண்டிய தேவையில்லை எனவும், எதிர்வரும் 18ஆம் திகதி காலை கூட்டமைப்பு தேர்தல் குழு சந்திக்கவுள்ளது. அந்தக் குழுவிலே அவரும் ஒரு அங்கத்தவர். அவருக்கும் நாங்கள் அழைப்பு விடுத்துள்ளோம். இதுவரை கட்சியின் வேட்பாளர்கள் யார் என்பது பற்றி எந்த முடிவும் எடுக்கவில்லை. நேற்றைய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கூட்டத்தில்கூட யார் யார் தெரிவு செய்யப்படவுள்ளனர், எந்தெந் தக் கட்சிக்கு எத்தனை ஆசனங்கள் மாவட்ட ரீதியாக ஒதுக்கப்பட வேண்டும் என்பன பற்றிகூட முடிவு எடுக்கவில்லை. இறுதி முடிவு வரும் 18ஆம் திகதி 12 மணிக்கு நடைபெறுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூட்டத்தில்தான் எடுக்கப்படும் என்றும் முடிவெடுத்துள்ளோம். எவரெவர் போட்டி இடுகின்றனர் என்பது பற்றிய பட்டியல் எவராலும் தயாரிக்கப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், எதிர்வரும் 18ஆம் திகதி எங்களுடைய கட்சியின் தேர்தல் குழு கூடுகின்றது. அந்தக் கூட்டத்திற்குத் தலைவர் ஆனந்தசங்கரி வருமிடத்தில் பிரச்சினையைப் பேசித் தீர்க்கக்கூடிய ஒருநிலைப்பாட்டை எதிர்பார்க்கிறோம். அப்படித் தவறும் பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பல கட்சிகள் உள்ளன. எனவே உதயசூரியன் சின்னம் இல்லையெனில் வேறொரு சின்னத்தில் நாங்கள் போட்டியிடக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அதாவது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தாய்க்கட்சி தமிழரசுக்கட்சி அதற்கும் ஒரு சின்னம் உள்ளது. அதாவது வீட்டுச்சின்னம். ஏனைய கட்சிகளுக்கும் சின்னங்கள் இருக்கின்றன.

இதுபற்றிய இறுதி முடிவு எதிர்வரும் 18ஆம்திகதி எடுக்கப்படும் என்றார் அவர்.

ஆனந்தசங்கரி கூறியிருப்பது போல நீதிமன்றத்தடை உத்தரவு தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி உள்ளதா எனக் கேட்டபோது இது வரை இல்லை, வரும் 18ஆம் திகதி நடைபெறுகின்ற கூட்டத்தில் முடிவு சமரசமாக முடிவடையுமானால் அன்றோடு பிரச்சினை தீர்ந்துவிடுமென தான் நினைப்பதாகவும்அவர் கூறினார்.

## கொழும்பு..

வீட்டுசின்னத்திலேயே போட்டியிடக் கூடிய சாத்தியம் இருப்பதாக அவர் கூறினார். ஆனந்தசங்கரியின் அறிக்கைகளால் தமிழ் மக்கள் குழப்பமடையத் தேவையில்லை தமிழ்க் கூட்டமைப்பு உறுதியான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. தமிழ்மக்கள் அனைவரும் ஒரே இலட்சியத்திற்காக இணைந்து வாக்களிக்கும் வகையில் கூட்டமைப்பின் தேர்தல் சின்னம் அமையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (32)

## தலைவரைச்..

முடிவெடுப்பார்கள் என நம்புகிறோம்.

- தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களுடன் தெற்கு அரசியல் குறித்து கலந்துரையாடியுள்ளீர்கள். அதன் முன்னேற்றம் குறித்து தெரிவிப்பீர்களா?

பாலா அண்ணருடன் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள், எதிர்காலத்தில் சமாதான முன்னெடுப்புக்கள் சம்பந்தமாக எங்கள் தேசியத் தலைவரின் சில கருத்துக்களை நாங்கள் பரிமாறிக் கொண்டோம். அவரும் சில கருத்துக்களை எங்களிடம் பேசியிருக்கின்றார். இவற்றினை எங்களுடைய தலைவரின் கவனத்திற்குக் கொண்டு சென்று அதன் பின்புதான் அவை சம்பந்தமான முடிவுகளை வெளிப்படுத்தலாம்.

- தேர்தலில் தமிழ் மக்களின் வாக்களிப்புச் சம்பந்தமாக தெரிவிப்பீர்களா?

இது சம்பந்தமாக சில கருத்துக்களுடன்தான் வந்துள்ளேன். எமது தேசியத் தலைவருடன் பேசி முடிவுகள் எட்டப்பட்டதன் பின்புதான் இது சம்பந்தமாக கருத்துக்களை சொல்லலாம்.

- பேரினவாதக் கட்சிகள் எல்லாம் வட-கிழக்கில் தேர்தலில் போட்டியிடுவது பற்றி கருத்து கூறுவீர்களா?

பேரினவாதக் கட்சிகளை என்றோ எமது மக்கள் நிராகரித்து விட்டார்கள். மீண்டும் தமிழ் மண்ணில் பேரினவாதக் கட்சிகள் காலூன்ற மக்கள் . அனுமதிக்கமாட்டார்கள் என்றே நம்புகின்றேன்.

- இவர்கள் இங்கு தேர்தலில் போட்டியிட அனுமதிப்பீர்களா?

அதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். தேர்தலில் நிற்பதோ, வெற்றியீட்டுவதோ அது மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

- வட-கிழக்கில் தேர்தல் நடத்துவதற்கு ஆதரவளிப்பார்களா?

அது சம்பந்தமாக தலைவருடன் பேசிய பிறகுதான் சரியான பதில் சொல்ல முடியும்.

- இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் கண்காணிப்புக் குழுவின் உதவியுடன் தேர்தல் நடத்துவது சம்பந்தமாக பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது. இது சம்பந்தமாக?

இது குறித்து எமது தலைவருடன் பரிசீலித்த பின்பு இதற்கு நாங்கள் முடிவெடுப்போம்.

- யாழ். நகரில் தேர்தலை முன்னிட்டு காவலரண்கள் அகற்றுவதும், படையினருக்கு விசேட பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும் பத்திரிகைகளில் செய்தி வெளிவருகின்றது. இதைப் பற்றிய தங்கள் கருத்து?

எங்களுக்குத் தெரியும். கடந்த எத்தனையோ ஆண்டுகளாக மக்கள் சிங்கள இனவாதத்தினுடைய போக்குகளை படித்திருக்கிறார்கள். புரிந்திருக்கிறார்கள். தேர்தல் காலத்தில் எப்படி நடந்து கொள்வார்கள், தேர்தல் முடிய எப்படி செயற்படுவார்கள் என்பதை எல்லாம் மக்கள் கடந்த பல வரலாறுகள் அவர்களுக்கு படிப்பினையாக இருக்கின்றது. அவர்கள் அதனை சரியாய் புரிந்து கொண்டு தீர்ப்பு வழங்குவார்கள் என்று நினைக்கின்றேன்.

- கண்காணிப்புக் குழு இவற்றில் ஈடுபடுவதற்கு சாத்தியமுண்டா?

எங்களைப் பொறுத்த வரையில் தேர்தலெனில் ஒரு நடு நிலைமையான கண்காணிப்பு நடவடிக்கை அவசியமானதும்கூட. ஆனால், எங்களுடைய தாயகப் பிரதேசத்திலே எப்படி தேர்தல் நடக்கப்போகின்றது, எப்படி கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பது நாங்கள் எங்களுடைய தலைவருடன் பேசியதன் பின்புதான் இது சம்பந்தமான முடிவுகள் எடுத்து அதன் பின்புதான் வெளிப்படுத்தலாம்.

- மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் ஐ.தே.க.வில் போட்டியிடப் போவதாக தகவல் வெளிவந்துள்ளது. இது குறித்து?

நாங்கள் விரைவில் அவர்களுடன் அதாவது இவ்வாரத்தில் முக்கிய சந்திப்புக்களை நடாத்தவுள்ளோம். அதற்குப் பின் எங்களது தலைவரின் கருத்துக்களை வெளிப்படுத்துவோம் என்றார்.

நேற்றுப் பிற்பகல் 1.45 மணிக்கு உலங்குவானூர்தி மூலம் அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்கள் தலைமையிலான குழுவினர் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கினர்.

தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் மற்றும் துறைசார் பொறுப்பாளர்கள் மத்திய விளையாட்டு மைதானத்திற்கு வருகை தந்து மேற்படி குழுவினரை வரவேற்றனர். (சோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.